முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.6.2023) வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் பனையின் சிறப்பினை பொதுமக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள "நெட்டை நெட்டை பனைமரமே என்ற காலப்பேழை புத்தகத்தை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறைச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மணிப்பூர் கலவரம்: ஒன்றிய அரசைக் கண்டித்து

கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் ஆர்ப்பாட்டம்!

இனிகோ இருதயராஜ் தலைமை! அரசியல் கட்சி தலைவர்கள் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 30 - மணிப்பூர் கலவர விவகாரத்தில் ஒன்றிய அரசை கண் டித்து கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே கடந்த 26ஆம் தேதியன்று ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு அமைப்பின் தலைவர் இனிகோ இருதயராஜ் தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தி.மு.க.செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன். காங்கிரஸ் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் சசிகாந்த் செந்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணை பொதுச்செயலாளர் எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநிலக்குழு உறுப்பினர் சின்னதுரை, இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில துணை செயலாளர் வீரபாண்டியன், ம.தி.மு.க. முதன்மை செயலாளர் துரை வைகோ, மனிதநேய மக்கள் கட்சிதலைவர் ஜவாஹிருல்லா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி துணைத்தலைவர் நவாஸ்கனி, தமிழக வாழ்வுரிமை கட்சி துணை பொதுச்செயலாளர் சத்ரியன் வேணுகோபால், மக்கள் கண்காணிப்பகம் ஆசீர், ஒருங்கிணைப்பாளர் செங்கை மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் நீதிநாதன், தென்னிந்திய திருச்சபை பேராயர் ஜார்ஜ் ஸ்டீபன், சென்னை மயிலை உயர் மறைமாவட்ட முன்னாள் பேராயர் சின்னப்பா உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய தலைவர்கள், பேராயர்கள் அனைவருமே மணிப்பூரில் மதக் கலவரத்தை பா.ஜ.க. நடத்தி வருவதாகவும், பா.ஜ.க.வுக்கு நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் சரியான தீர்ப்பை வழங்கவேண்டும் என்றும் கருத்துகளை முன் வைத்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் கழகத்தினருக்கு பொற்கிழி!

சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!

நெல்லை.ஜூன் 30 - நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வருகின்ற 03.07.2023 திங்கட்கிழமை அன்று நெல்லை டவுண் லட்சுமி மகாலில் வைத்து கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அது தொடர்பான முன்னேற்பாடு குறித்த ஆலோசனைக் கூட்டம் மாநகர கழக அலுவலகத்தில் மாநகர செயலாளர் சு. சுப்பிரமணியன் தலைமையில் துணை செயலாளர் அப்துல் கையூம், மாநகர பொருளாளர் அண்ணாதுரை, பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை) நமச்சிவாயம் என்ற கோபி (நெல்லை) அன்டன் செல்லதுரை (பாளை) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநகர பிரதிநிதிகள் சிவா, இசக்கி முத்து,ஜான்சன் யேசுபாதம்,பீர் மஸ்தான்,சேவியர், நத்தம் கந்தன், மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ்,ஜவகர்,வட்ட செயலாளர்கள் பேபி கோபால், கேபிள் குமரேசன், சாலி மௌலானா, வர்த்தக அணி எல்.ஐ.சி. பேச்சிமுத்து,தளபதி ஆறுமுகம், ஜலீஸ்ரகுமான், சார்லஸ்,முத்துராஜ்,கழக பேச்சாளர் மைக் மணி,இளைஞர் அணி மணிகண்டன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு.

நெல்லை மத்திய மாவட்டம் நெல்லை மாநகரத்துக்கு உட்பட்ட தச்சை பகுதியில் சேர்ந்த 28 வது வார்டு கழகப் பிரதிநிதி ராஜகோபால் அன்புத் தாயார் ராதாலட்சுமி அவர்கள் (17.06.2023) அன்று இயற்கை எய்தினார்கள்.அவர்கள் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவர் பிறந்த திருவாரூரில் கலைஞர் கோட்டம் அமைத்த கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது.

2024 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற பொது தேர்தலில் பாசிச பா.ஜ.க.வை வீழ்த்த அனைத்து எதிர்கட்சிகளும் ஓரணியில் இணைய வேண்டும் என கடந்த மார்ச் 1ஆம் தேதி தனது பிறந்த நாளில் எதிர்க்கட்சி தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். அதன் அடிப்படையில் நம் தளபதியாரின் கோரிக்கையை ஏற்று முதற் கட்டமாக பீகார் மாநிலம் பாட்னாவில் நடைபெற்ற 16 கட்சி தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்ட நம் தளபதியாருக்கு வாழ்த்துக்களும் நன்றியும் தெரிவித்தல்.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும்,தொழில் வளர்ச்சியை அதிகரிக்கவும் கடந்த மாதம் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு சென்று முதலீடுகளை ஈர்த்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது.

வேர்களைத் தேடி என்ற தலைப்பில் நெல்லை மாநகரத்துக்கு உட்பட்ட 4 பகுதிகளிலும் உள்ள 55 வார்டுகளிலும் நடைபெற்ற வட்டக் கழக ஆய்வுக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், நெல்லை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார்,பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், மற்றும் மாநில நிர்வாகிகளுக்கு, மாநகர நிர்வாகிகளுக்கு, பகுதி கழக செயலாளர்கள்,பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி கழக மாமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் கழக சொந்தங்களுக்கும் நன்றி தெரிவிப்பது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழகத்தின் அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி தலைமையில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர். எஸ்.ராஜ கண்ணப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், ஆகியோர் முன்னிலையில் வருகின்ற ஜூலை 3ம் தேதி திங்கட்கிழமை நம் மாநகர தி.மு.க. சார்பில் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியை வெகு சிறப்பாக நடத்துவது

போன்றவை உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலநீலிதநல்லூர் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரியில்

மாணவ - மாணவிகளுடன் கனிமொழி கருணாநிதி கலந்துரையாடல்!

மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தென்காசி, ஜூன் 30 - தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தொகுதிக்கு உட்பட்ட மேலநீலிதநல்லூரில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியில் தமிழ்நாடு மாணவர் மன்றம் சார்பில் நடைபெற்ற மாணவ - மாணவிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு மாணவ - மாணவிகளின் கேள்விகளுக்கு பதிலுரை வழங்கி,சிறப்பாக செயல்பட்ட மாணவ -மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

பின்னர் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசியதாவது:-

பெண்களுக்கு பொறுமை தேவைதான். ஆனால் அதையும் தாண்டி எல்லா நேரங்களிலும் தைரியத்துடன் செயல்பட வேண்டும். உங்களுடைய உரிமைகளுக்காக தைரியமாக விட்டுக் கொடுக்காமல் போராட வேண்டும். மாணவர்களுக்கு பொறுமை தேவை. ஏனென்றால் பெண்களுக்கு பொறுமை தேவை என்பதை வழி வழியாக சொல்லி வளர்த்திருக்கிறார்கள். பெண்கள் பொறுமையை விட்டு விட்டு இனி தைரியத்திற்கு வர வேண்டும்.

அறிவுரை கேட்காதீர்கள்.உங்களுடைய கனவு என்ன,உங்களுடைய லட்சியம் என்ன,என்பது உங்களுக்கு தெரியும். உன்னால் இதை செய்ய முடியாது? இது உன்னால் முடியுமா? என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதையெல்லாம் கேட்காதீர்கள் உங்கள் வெற்றிக்கான பாதையை நீங்கள் உருவாக்குங்கள்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் நடந்து கொண்டிருந்த போது கிட்டத்தட்ட 67 பெண்களுக்கு மேல் கைக்குழந்தை யோடு,கர்ப்பிணியோடு,பெண்கள் சேர்ந்து போராடி இருக்கிறார்கள். திராவிட இயக்கம் நடத்தக் கூடிய அரசு "திராவிட மாடல்" ஆட்சி.இவை அனைத்துமே பெண்களின் உழைப்பின் மீது கட்டப்பட்டது தான்.பெண்களால் உருவாக்கப்பட்டது தான்.இதில் பெண்களுடைய பங்கு இன்னும் அதிகரிக்க வேண்டும்,என்பது தான் நம்முடைய இடஒதுக்கீட்டுக்கான போராட்டம் ஆகும்.

பெண்களுடைய உரிமைகளுக்காக போராடியவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.ஆனால் பெண் உரிமைகளுக்காக பெண் மட்டும் தான் போராட வேண்டும் என்ற அவசியம் இல்லை.எனக்குத் தெரிந்த எல்லா பெண்களையும் விட அதிகமாக பெண் உரிமைகளைப் பற்றி பேசி இருக்கக்கூடிய தலைவர் தந்தை பெரியார்.இளைஞர்கள் எல்லோரும் அரசியலுக்கு வாருங்கள்,இளைஞர்கள் அரசியல் தேவை இல்லை என்று சொல்வார்கள்.அது தவறானது, இளைஞர்கள் அரசியலுக்கு வாருங்கள் ஆனால் நாம் யார்,நான் இந்த இடத்தை பெறுவதற்கு என்னென்ன போராட்டங்களை கடந்து வந்திருக்கிறோம்,என்பதை தெரிந்து கொண்டு அரசியலுக்கு வாருங்கள். உங்களால் நாடு நிச்சயமாக வளம்பெறும்.

பெண்கள் அரசியலில் சாதிக்க வேண்டும் என்றால், தான் சார்ந்து இருக்கக்கூடிய இயகத்தினுடைய கொள்கைகள் என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அதைப் பற்றி ஒரு ஆழமான புரிதல் இருக்க வேண்டும். நாம் எந்த மாதிரியான ஒரு சமூகத்தை உருவாக்க நினைக்கிறோம்,என்கிற ஒரு தெளிவான கனவு இருக்க வேண்டும். அதையும் தாண்டி ஒரு பெண் அரசியலுக்கு வரும்போது எந்த ஒரு பொது தளத்துக்கு வந்தாலும் தனிப்பட்ட முறையில் உங்களைப் பற்றி விமர்சனங்கள் வைக்கப்படும்.அதை நீங்கள் ஒதுக்கித் தள்ள கற்றுக் கொள்ள வேண்டும்.ஒரு பெண்ணால் முடியுமா? என்ற கேள்வி உங்களுக்குள் வரக்கூடாது.தைரியத்தோடும், தன்னம்பிக்கையோடும்,அரசியலுக்கு வாருங்கள்.நிச்சயமாக உங்களால் சாதிக்க முடியும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பேசினார்கள்.

நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.கல்லூரி முதல்வர் ஹரிகெங்காரம்,மேல நீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை,கல்லூரி ஆலோசனை குழு உறுப்பினர்கள் பேராசிரியர் ராமபாரதி,முனைவர் சிவகுமார் உள்பட மாணவ - மாணவிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

முன்னதாக தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தேவர்குளத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.கழக கொடியை ஏற்றினார். அதனைத் தொடர்ந்து சங்கரன்கோவில் தெற்கு ஒன்றியம் சார்பில் மதினாநகரில் கழக கொடியை ஏற்றினார். தொடர்ந்து சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள இ சேவை மையத்தை கழக துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர் சீனிவாசன், ஒன்றிய செயலாளர்கள் வெற்றி விஜயன், பெரியதுரை, லாலா சங்கர பாண்டியன், மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துசெல்வி நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி சரவணன்,நகர செயலாளர் பிரகாஷ் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

கேளம்பாக்கம் முரசொலி முகவரும் கிளைக் கழக செயலாளருமான

தி.க.பாளையம் - த.உமா பார்வதி இல்லத் திருமண வரவேற்பு விழா!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் வாழ்த்துரை! எஸ்.ஆர்.எல்.இதயவர்மன் தலைமை!

சென்னை, ஜூன் 30 - செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கம் முரசொலி முகவரும் கிளைக் கழக செயலாளருமான தி.க.பாளையம் - த. உமா பார்வதி பாளையம் ஆகியோரின் புதல்வர் பா.சூரிய பிரகாஷ் - கேளம்பாக்கம் ஊராட்சி சாத்தங்குப்பம் கனக பரமேஸ்வரன் நகர் நினைவில் வாழும் ஏ.சேகர் - வரலட்சுமி சேகர் ஆகியோரின் புதல்வி சே. சௌமியா ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (30.6.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 6.00மணி அளவில் கேளம்பாக்கம் ஓ.எம்.ஆர்.சாலையில் உள்ள மோகனா மஹால் திருமண மண்டபத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் நடை பெறுகிறது.

இத்திருமண வரவேற்பு விழாவிற்கு திருப்போரூர் வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் எஸ்.ஆர்.எல். இதயவர்மன் தலைமை வகிக்கிறார்.

ஜி.சி.அன்பு செழியன், எம்.சேகர், மு.தேவராஜ், பரிதி இளம் சுருதி, வி.விஜயகுமார், ம.ஜெயலட்சுமி மகேந்திரன், மேகலா வெங்கடேசன், கோ.பலராமன், ந.பலராமன், கொத்தளம் கோ.அண்ணாதுரை, க.கௌரிசங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இத்திருமண வரவேற்பு விழாவில் காஞ்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மேலும் இவ்விழாவில் செல்வம் எம்.பி., சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா ராஜன், எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., வந்தவாசி எஸ்.அம்பேத்குமார் எம்.எல்.ஏ.,

து.மூர்த்தி, வெ.விஸ்வநாதன், வீ.தமிழ்மணி, ஆ.மனோகரன், செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், காயத்ரி அன்பு செழியன், அ.தமிழ்மாறன், எம்.கே.டி. கார்த்திக், சத்யா சேகர், தா.ஜெயசந்திரன், டி.காமராஜ் எம்.சி., எஸ்.இந்திரன், ஜோசப் அண்ணாதுரை, டி.யுவராஜ், எஸ்.ஆர்.லட்சுமிபதி, மு.நி. தமிழ் குமரன், ஜே.கே.பூபதி, கோவிந்து, என்.சக்திவேல், கே.கே.சம்பத், அ.முனுசாமி, எம்.ரவிச்சந்திரன், தா.ராஜாராம்,

எஸ்.எம்.ஏகாம்பரம், எஸ்.ஜெயபால், ஏ.ரமேஷ், மகாலட்சுமி ராஜாராம், எஸ்.ராமகிருஷ்ணன், ஏ.கருணாகரன், மு.மயில் கண்ணன், என்.ஜி.கெஜராஜன், சே.எல்லப்பன், மற்றும் திருப்போரூர் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

நிறைவாக கேளம்பாக்கம் முரசொலி முகவரும் கிளைக் கழக செயலாளருமான தி.க.பாளையம் நன்றி கூறுகிறார் .

தேனி வடக்கு மாவட்டம் உழவர் சந்தை அருகில் பூமாலை வணிக வளாகத்தை பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் திறந்து வைத்தார். உடன் கவுன்சிலர் சதீஷ் பவன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பத்தூர், ஜூன் 30 - திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (01.07.2023 - சனிக்கிழமை) காலை 11.00 மணியளவில் திருப்பத்தூர் - வாணியம்பாடி சாலையில் அமைந்துள்ள மண்டலவாடி லட்சுமி மஹாலில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில்

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துகிறார்.

அதுசமயம் இன்னாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : *1.* இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் வருகை குறித்து,

2. வாக்காளர் சேர்த்தல் சிறப்பு முகாம்,

3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் மாநகராட்சி வலம்புரிவினை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதிய நீர் உந்து நிலையத்திற்கு குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் ஆனந்த் மோகன் குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் திருநாவுக்கரசு, மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் பகவதி பெருமாள், துணை மேயர் திருமதி மேரி பிரின்சி லதா, மண்டலத் தலைவர் திருமதி அகஸ்டினா கோகிலாவாணி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி அனிலா சுகுமாரன், ஜெயவிக்ரமன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.